SRI LANKA

இலங்கை கணக்கீட்டுத் தொழில் நுட்பவியலாளர் கழகம்

# AA2 பரீட்சை - யூலை 2017

**(July 2017 Examination - AA2 Level)**

வினாக்களும் விதந்துரைக்கப்பட்ட விடைகளும்

பாட இலக்கம் **: AA25**

# வியாபாரச் சட்டமும் ஒழுக்கநெறியும் (BLE)


இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாஹிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05

தொ.பே - 011 2 559 669

**கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் ஒரு வெளியீடு**

# இலங்கை கணக்கீட்டுத் தொழில் நுட்பவியலாளர் கழகம்

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு

## AA2 பரீட்சை – யூலை 2017

## (AA25) வியாபார சட்டமும் ஒழுக்கநெறியும்

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**பகுதி - A**

**குறு நோக்குவினாக்கானவிடைகள் (OTQs)**

**பத்து (10) கட்டாய வினாக்கள்.**

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

### வினா 01ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

| *Question* | *Answer* |
|---|---|
| 1.1 | (3) |
| 1.2 | (4) |
| 1.3 | (1) |
| 1.4 | (4) |
| 1.5 | (4) |
| 1.6 | (2) |
| 1.7 | (1) |

1.8
- குடியியல் மற்றும் குற்றவியல் வழக்குகளுக்கான இறுதியானதும் முடிவானதுமான மேன்முறையீடுகளை ஏற்றுக்கொள்ளும் அதிகாரம்
- மனிதஉரிமை மீறல்களை விசாரிக்கும் அதிகாரம்
- நாடாளுமன்ற உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரிக்கும் அதிகாரம்
- மேன்மைதகு சனாதிபதியினால் பணிக்கப்படும் விடயங்கள் தொடர்பாக ஆலோசனை வழங்கும் அதிகாரம்
- அரசியலமைப்புத் தொடர்பாகத் தீர்ப்பளிக்கும் அதிகாரம்

1.9
- குடும்பவிடயங்கள் தொடர்பான விடயங்களுக்குப் பொருந்தும் சட்டம் தனியார் சட்டமாகும்
- குறித்த பிரதேசமொன்றில் வாழும் அனைத்து மக்களுக்கும் பிரயோகிக்கத்தக்க சட்டம் பிராந்தியச் சட்டம் ஆகும்.

1.10
1. திட்டங்களின் முன்வரைபுகள் தொடர்பாக முதலீட்டாளர்களுடன் ஆலோசனை நடாத்துதல்
2. நிபுணத்துவ ஆலோசனை வழங்குதல்
3. வரிமற்றும் ஏனைய சலுகைகளை வழங்குதல்.

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

**பிரிவு *A* இன் நிறைவு**

**பகுதி - B**

**05 கட்டாய வினாக்கள்**
**(மொத்தம் 25 புள்ளிகள்)**

## வினா 02ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

இரண்டு நபர்களுக்கிடையிலான நடத்தையின் ஊடாக முகவராண்மையொன்று உருவாக்கப்படலாம். இம்முகவராண்மையானது நடத்தையின் ஊடான முகவராண்மை உருவாக்கம் எனவும் அம்முகவராண்மையை ஏனையவர்கள் நம்பும் வகையாகவும் அந் நடத்தை அமையும். அந்த வகையிலேயே ஹேமல் ஒரு பணிப்பாளர் என ஓஎம் கம்பனிக்கு அறிமுகப்படுத்தப்பட்டதையடுத்து அவரை ஏபி கம்பனியின் முகவராக நம்பிய ஓஎம் கம்பனியானது ஹேமல் உடன் காணி ஒப்பந்தமொன்றை மேற்கொண்டுள்ளது. இம்முகவராண்மையை மறுப்பதற்கு அமல் மற்றும் பிமல் ஆகிய இருவருக்கும் உரிமையில்லை.

எனவே நடத்தை மூலமான முகவராண்மை ஏபி கம்பனிக்கும் ஹேமலுக்கும் இடையே உருவாகியுள்ளது. இதனால் ஹேமல் மேற்கொண்ட ஒப்பந்தத்திற்கு ஏபி கம்பனிகட்டுப்படவேண்டியுள்ளது. இவ்வடிப்படையில் ஹேமல் கொள்வனவு செய்த காணிக்கான கொடுப்பனவை ஏபி கம்பனி வழங்க வேண்டும்.

**(மொத்தம் 05 புள்ளிகள்)**

## வினா 03ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

வங்கியின் பொறுப்பை ஆராயும் பொழுது பின்வரும் விடயங்கள் கருத்திற்கொள்ளப்பட வேண்டும்

1. **குறுக்குக் கோடு**

   காசோலை குறுக்குக் கோடிட்டிருப்பது வங்கியின் மீது எவ்வித பொறுப்பையும் ஏற்படுத்தாது. குறுக்குக் கோடிடலானது அக்காசோலையைப் பெறுபவர் ''சட்டமுறையில் அக்காசோலையைப் பெற்றவராக'' இருக்க வேண்டும் என்பதையே வலியுறுத்தும்.

2. **ஒப்பம் தெளிவின்மை மற்றும் பெறுமதி எழுத்திலும் தொகையிலும் ஒவ்வாமை.**

   இவ்விரு தவறுகள் தொடர்பாகவும் வங்கி பொறுப்புடையதாகும். இவ்விரு தவறுகளையும் கண்ணுற்றவுடன் இக்காசோலைமை மதிப்பிழக்கச் செய்யவேண்டிய பொறுப்பு வங்கிக்கு உண்டு. தற்செயலாக வங்கியானது இக்காசோலைக்குக் கொடுப்பனவை மேற்கொள்ளுமாயின் அக்காசோலையை வரைந்தவருக்கு வங்கி பொறுப்பாகும்.

3. வங்கி மீதி போதுமானதாக இல்லை.

**(மொத்தம் 05 புள்ளிகள்)**

## வினா 04ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

a) - பரிமாற்று உண்டியல்
- திரட்டு உடன்படிக்கை
- திறந்த கொடுப்பனவு முறை
- இலத்திரனியற் கொடுப்பனவு

b) **பரிமாற்று உண்டியல்**

விற்பனையாளனால் வரையப்பட்டு கொள்வனவாளனால் குறித்த திகதியில் கொடுப்பனவைச் செலுத்துவேன் என கையொப்பம் இட்டு உறுதியளிக்கப்படும் ஆவணம் மாற்றுண்டியல் ஆகும். கையொப்பமிட்டவுடன் கொள்வனவாளன் உண்டியலுக்கான கொடுப்பனவை வழங்கும் கடப்பாட்டை கொண்டிருப்பார். விற்பனையாளன் அவ்வுண்டியலை வங்கியிடம் கையளித்தவுடன் வங்கி, உண்டியலை ‘‘நெறிமுறையில் வைத்திருப்போன்’’ ஆவார். குறித்த திகதியில் வங்கி உண்டியலை கையளித்து கொள்வனவாளனிடம் பணத்தை பெற்றுக் கொள்ளும்.

**திரட்டு உடன்படிக்கை**

விற்பனையாளன் கப்பலிடும் ஆவணங்களை தனது வங்கிக்கு (பெறும் வங்கி) கையளிக்க அவ்வங்கி கொள்வனவாளனின் வங்கிக்கு (திரட்டும் வங்கி) அவ்வாவணங்களை அனுப்பும். திரட்டும் வங்கி தன்னிடமுள்ள கப்பலிடும் ஆவணங்களைக் கொள்வனவாளனுக்குக் காண்பிக்கும். அதனைக் கொள்வனவாளன் ஏற்றுக்கொண்டால் அவ்வாவணங்களைக் கொண்டு கொள்வனவாளன் கப்பிலிடும் ஆவணங்களின் உண்மைப்பிரதியைப் பெற்றுக்கொள்ளவும் அவ்வுண்மைப்பிரதிகளைக் கொண்டு பொருட்கள் துறைமுகத்தை வந்தடைந்தவுடன் கொள்வனவாளன் பெற்றுக்கொள்ளவும் வங்கி உதவிபுரியும்.

இந்நடைமுறையானது சர்வதேச வர்த்தகச் சம்மேளத்தினால் உருவாக்கப்பட்ட ‘‘வர்த்தகப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளும் சட்டமுறைமை’’ க்கு அமைவாக மேற்கொள்ளப்படுகின்றது.

**திறந்த கொடுப்பனவு முறை**

நம்பிக்கையுடைய கொள்வனவாளனும் விற்பனையாளனும் சாதாரண கொள்வனவு, விற்பனை நடைமுறையில் அதாவது கப்பலிடும் ஆவணம் மற்றும் வர்த்தக ஆவணங்களை கொள்வனவாளன் பெற்றுக் கொண்டு பின்னொரு திகதியில் விற்பனையாளனுக்கு கொடுப்பனவைச் செலுத்தும் முறை ஆகும்.

**இலத்திரனியல் வர்த்தகம்**

சர்வதேச வர்த்தகத்தினையும் அதற்குரிய கொடுக்கல் வாங்கல்களினையும் நவீன தொழில்நுட்பமான வலைத்தளத்தினூடாக மேற்கொள்வதே இலத்திரனியல் வர்த்தகமாகும்.

**(மொத்தம் 05 புள்ளிகள்)**

## வினா 05ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

காப்புறுதி ஒப்பந்தங்களானது மீயுயர் நம்பிக்கைத் தத்துவங்களின் கீழ் உருவாகுபவை ஆகும். அதாவது காப்புறுதி ஒப்பந்தத்தில் ஈடுபடும் தரப்பினர் தம்மிடையே பொருண்மையான தகவல்கள் அனைத்தினையும் பரிமாறி இருக்க வேண்டுமென்பதே இத்தத்துவத்தின் அடிப்படையாகும். இப்பொருண்மைத் தகவலின் அடிப்படையிலே காப்புறுதி ஒப்பந்தத்தில் ஈடுபடலாமா அல்லது அவ்வாறு ஈடுபட்டால் நிர்ணயிக்க வேண்டிய தொகை எவ்வளவுஎன்பது தீர்மானிக்கப்படுகிறது.

உதாரணமாக ஆயுட் காப்புறுதியின் போது தலையிடி ஒரு பொருண்மையற்ற தகவலாக இருக்கும்

அதேவேளை நீரிழிவு ஒரு பொருண்மைத் தகவலாக இருக்கும். இந்த அடிப்படையில் பொருண்மைத் தகவலொன்றை வெளிப்படுத்தாது விடுவது அக்காப்புறுதி ஒப்பந்தத்தை வறிதாக்கிவிடும். இதனை லூக்கர் எதிர் லோ யூனியன் இன்சூரன்ஸ் கம்பனி தீர்ப்பும் உறுதியளிக்கின்றது. இவ்வழக்கில் பெகாருண்மைத் தகவலொன்றை வெளிப்படுத்தாததால் காப்புறுதி ஒப்பந்தம் வறிதானது என தீர்க்கப்பட்டது.

இந்த அடிப்படையில் பிந்துவின் கோரிக்கையை காப்புறுதி கம்பனி நிராகரிக்க முடியும்.

**(மொத்தம் 05 புள்ளிகள்)**

## வினா 06ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

a)
- வினைத்திறனும் வெளிப்படைத் தன்மையும் வாய்ந்த முறையீட்டு பொறிமுறை ஒன்றை வேலைத்தளத்தில் உருவாக்குதல்.
- துர்நடத்தைக்கு எதிராக வெளிப்படையான முறையீட்டை மேற்கொள்ள தூண்டுதல்
- மேற்பார்வையையும் கண்காணிப்பையும் உருவாக்குதல்
- அடிப்படைக் கோட்பாடுகளுக்கு இணைவாக ஒழுகுதலை முகாமை வலியுறுத்துதல்.

b)
- பெருநிறுவன ஆளுகைக்குரிய விதிகளைப் பின்பற்றல்
- நிபுணத்துவ கட்டளைகளை உருவாக்குதல்
- தொழிற்கல்வி மற்று பயிற்சி தேவைப்பாடுகளை உருவாக்குதல்
- நிபுணத்துவ விருத்திக்கான தேவைப்பாடுகளை உருவாக்குதல்
- நிபுணத்துவ கண்காணிப்பு மற்றும் ஒழுக்காற்று ஒழுங்குவிதிகளை உருவாக்குதல்.
- சட்ட வலுவுள்ள மூன்றாம் தரப்பால் முறைகளை மேற்பார்வை செய்தல்.

**(மொத்தம் 05 புள்ளிகள்)**

**பிரிவு *B* இன் நிறைவு**

## பகுதி - C

**03 கட்டாய வினாக்கள்**
**(மொத்தம் 30 புள்ளிகள்)**

## வினா 07ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

தவறான நடத்தை ஒன்றால் பாதிக்கப்படும் தரப்பினருக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களாக பங்குடமை ஒன்றின் அனைத்து பங்காளர்களும் காணப்படுவர்.

பங்குடமைச் சட்டத்தின் 10ம் பிரிவின் படி துர்நடத்தையானது பங்குடமையின் சாதாரண வியாபார நடவடிக்கையின் போது நிகழ்த்தப்பட்டிருந்தால் அத்துர்நடத்தையால் பாதிக்கப்படும் தரப்பிற்கு பங்குடமையின் அனைத்து பங்காளர்களும் பொறுப்பானவர்கள் என்று அப்பங்குடமையின் பங்காளர்கள் அனைவருக்கும் எதிராகவோ அல்லது ஒருவருக்கு எதிராகவோ சட்ட நடவடிக்கையை மேற்கொள்ள முடியும் என்று கூறப்பட்டுள்ளது.

ஹம்லின் எதிர் ஹுஸ்டன் கம்பனி வழக்கில் பங்குடமை ஒன்றின் பங்காளர்கள் அவர்களது வியாபார போட்டி நிறுவனத்தின் தகவல்களைப் பெற்றுக் கொள்ள கையூட்டு வழங்கியிருந்தனர். போட்டி வியாபாரம் பங்குடமைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்த போது அப்பங்குடமையின் பங்காளர்கள் அனைவரின் மீதும் குற்றம் சுமத்தப்பட்டு அனைவரும் பொறுப்பாக்கப்பட்டனர்.

ABS பங்குடமையின் ஒரு பங்காளரான சுமி வரையறுக்கப்பட்ட XYZ கம்பனியின் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக அக்கம்பனியின் பணிப்பாளர் ஒருவருக்கு கையூட்டு வழங்கியுள்ளார். பங்குடமையானது தனது அதிகாரத்திற்கு அமையத் தன் சாதாரண வியாபார நடவடிக்கையின் பொருட்டு இக்கையூட்டை வழங்கியுள்ளது. ஆதலால் XYZ கம்பனி ABS பங்குடமையின் மீது வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.

பங்குடமையானது சட்டத்தின் கண் தனி நபராக கருதப்படாமையால் அப்பங்குடமையின் பங்காளர் ஒருவர் மேற்கொள்ளும் உடன்படிக்கையின் போது அப்பங்காளர் பங்குடமையின் அனைத்துப் பங்காளரினதும் முகவராகவே கருதப்பட்டு உடன்படிக்கை மேற்கொள்ளப்படும். இதனால் ஒரு பங்காளரின் நடவடிக்கைக்கு அனைத்துப் பங்காளர்களும் கூட்டாக பொறுப்பாக்கப்படுவர்.

அதனாலும் XYZ கம்பனி ABS பங்குடமையின் மீது வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## வினா 08ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

a) காப்புரிமைச் சட்டத்தின் படி தொழில் என்பது அச்சட்டத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும் எந்தவொரு கலை, இலக்கிய, விஞ்ஞான வெளியீட்டையும் காப்பளிக்கும். அவ்வகையில்

- i. எழுதப்படும் புத்தகங்கள் மற்றும் கணனி நிகழ்ச்சித் திட்டங்கள்
- ii. பேச்சு
- iii. நாடகம், நடிப்புடனான இசை
- iv. அரங்கச் செயற்பாடுகள்
- v. இசைச் செயற்பாடுகள்
- vi. கட்புலச்செயற்பாடுகள்
- vii. கட்டிடக்கலை

ஆகியவற்றினையும் புலமைச் சொத்தாக கருதி காப்பளிக்கும்.

b) காப்புரிமைச் சட்டத்தின் கீழ் எழுத்தாளர் ஒருவரின் பதிப்புரிமையானது பின்வரும் இரு சரத்துக்களின் கீழ் பாதுகாக்கப்படுகின்றது.

1. எழுதுபவர் உயிருடன் இருக்கும் வரை

2. அவர் மரணித்து எழுபது வருடங்கள் வரை

ஆகவே நந்தாவின் பிள்ளைகள் காப்புரிமைச் சட்டத்தின் கீழ் ரங்காவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியும். ரங்கா ஏற்பட்ட இழப்புக்களைச் செலுத்தும் பொறுப்புடையவர் ஆவார்.

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## வினா 09ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a) நிமால் தனது ஐம்பத்தைந்தாவது வயதை பூர்த்தி செய்யும் வரை ஊ.சே.நிதியை பெற முடியாது.

(b) பெண்ணொருவர் தனது திருமணத்தின் பொருட்டு பணியில் இருந்து விலகும் திகதியில் ஊ.சே. நிதியை பெற முடியும் என்பதால் மாலினி தனது ஊ.சே.நிதியை பெற முடியும்.

(c) ஆஷா நிதியை பெற முடியாது ஏனெனில் அவர் வெளிநாட்டுக் கம்பனியொன்றில் ஒப்பந்த அடிப்படையில் பணியை பெற்றிருப்பதால் அவ்வொப்பந்தம் முடிவடைந்த பின் நாட்டுக்குத் திரும்ப மாட்டார் என்பதை சந்தேகமற நிரூபிக்க முடியாது உள்ளது. அதனால் வெளிநாட்டுக்குச் செல்வதை மட்டும் காரணம் காட்டி ஊ.சே.நிதியை அவரால் பெற்றுக் கொள்ள முடியாது.

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

SRI LANKA

**பிரிவு *C* இன் நிறைவு**

## பகுதி - D

**கட்டாய வினா**

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

## வினா 10ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

a)

i. உடன்படிக்கையானது சட்ட வலிதான ஒப்பந்தமாக மாறுவதற்கு ஒப்பந்தத்தில் ஈடுபடுபவர்களிடையே சட்டக் கடப்பாட்டை உருவாக்குவதற்கான எண்ணம் முக்கியமானதாகும். வியாபார நோக்கற்ற ஒப்பந்தங்களான கணவன் மனைவிக்கிடையேயானவை, பெற்றோர் தமது குடும்பக்கடமையினை நிறைவேற்றுபவை குடும்ப ஒப்பந்தங்கள் என வரையறுக்கப்படுகின்றன. இக்குடும்ப ஒப்பந்தங்களின் அடிப்படையாக இருப்பது ஒப்பந்தத்தில் ஈடுபடுபவர்களிடையே சட்டக் கடப்பாட்டை உருவாக்கும் எண்ணம் இல்லாது இருப்பது ஆகும். - பல்போர் எதிர் பல்போர்

என்றாலும் கூட குடும்ப ஒப்பந்தங்களிலும் சட்டக்கடப்பாட்டை உருவாக்கும் எண்ணம் சில நிகழ்வுகளால் உருவாகக் கூடும். - மெரிட் எதிர் மெரிட்

மேலும் இவ்வழக்கில் காதலும் ஈர்ப்பும் ஒப்பந்தமொன்றின் பதிலிறுக்கியாக இருக்க முடியாது என அமல் தெரிவித்துள்ளார்.

எவ்வாறு இருப்பினும் ரோமன் டச்சுச்சட்டப்படி நியாயமான விளைவொன்றை ஒப்பந்தம் ஏற்படுத்துமாயின் அவ்விளைவை பதிலிறுக்கியாக கொள்ள முடியுமென கூறப்பட்டுள்ளது. தரப்பினர் முக்கியமான விடயங்களை கருத்தில் கொண்டு ஒப்பந்தமொன்றைச் செய்திருப்பின் அம்முக்கிய விடயம் பதிலிறுக்கியாக கொள்ளப்படும். எனினும் அம்முக்கிய விடயம் பணத்தினால் அளவிடக் கூடியதாகவோ அல்லது அளவிட முடியாததாகவோ இருக்கலாம். எனவே காதலும் ஈர்ப்பும் பணப்பெறுமதி அற்றதாக இருப்பினும் திருமண ஒப்பந்தம் முக்கிய விடயமென்பதால் பதிலிறுக்கியாக கொள்ளப்படலாம்.

இதனால் அமல் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.

ii. கடைக்காரர் தொடர்பாக அமாலிக்கு இருக்கும் பொறுப்புக்கள்

கடை ஒன்றில் விலையிடப்பட்டு தொங்கவிடப்பட்டிருக்கும் பொருட்கள் கொடைமுனைவிற்கான அழைப்பாகவே கருதப்படும் என பிஸர் எதிர் பெல் வழக்கில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமாலி கடையில் விலையிடப்பட்டு தொங்கவிடப்பட்டுள்ள விளையாட்டுப் பொருளை கையில் எடுத்துப் பார்த்து அதற்கு ஒரு விலையை குறிப்பிட்டுச் சொல்வது, கொடைமுனைவாகவும் அதனை கடைக்காரர் ஏற்றுக் கொள்வது ஏற்பாகவும் கருதப்பட வேண்டும். அதன் போதே சட்ட வலிதான ஒப்பந்தம் உருவாகும். இங்கு அமாலி அவ்விளையாட்டுப் பொருளை வாங்குவதற்கான விலை ஒன்றினை குறித்தது கொடைமுனைவாகும். எனினும் அதனை கடைக்காரர் ஏற்றுக் கொள்ள முன் அதாவது ஒப்பந்தம் உருவாக முன் அவ்விலையினை மீளப் பெற்றுக் கொண்டுள்ளார். இதனால் அங்கு சட்ட வலிதான ஒப்பந்தம் உருவாகவில்லை.

b. 1. இவ் ஒப்பந்தமானது பொருள் விற்பனை ஒப்பந்தமாகும்.

2. பொருள் விற்பசைன் சட்டத்தின் கீழான ஒப்பந்தங்கள் வாங்குவோனுக்குஉள்ள உரிமை மற்றும் கடமையினை வெளிப்படுத்துகின்றது.

3. தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் விற்பனையாளன் பின்வரும் நிபந்தனைகளை மீறியுள்ளது தெளிவாகின்றது.

i. உட்கிடை நிபந்தனையான விற்பதற்கான உரிமை மீறல் - பொருள் விற்பனைச் சட்டம் பிரிவு 13 (றோலன் எதிர் திவால் - கொள்ளையடிக்கப்பட்ட மகிழுந்து தொடர்பான வழக்கு)

ii. பொருளின் உண்மையான விபரங்களை வெளிப்படுத்தும் உட்கிடை நிபந்தனை மீறல் - பொருள் ஒன்றின் விபரங்களை பொருள் விற்பனை ஒப்பந்தத்தில் வெளிப்படுத்தும் போது அதற்கமையவே விற்கப்படும் பொருள் இருக்க வேண்டும். (பேல் எதிர் டெயிலர்)

iii. விற்கப்படும் பொருளின் தரம் தொடர்பான நிபந்தனை மீறல் - விற்கப்படும் பொருளின் தரம் பொதுவான பாவனைக்கு உகந்ததாக இருக்க வேண்டும்.

மேற்போந்த மூன்று விற்பனை ஒப்பந்த நிபந்தனைகளையும் விற்பனையாளர் மீறியிருக்கின்றார் என்றாலும் சில்வா, அம்மகிழுந்தைக் கொள்வனவு செய்த போது முழுவதுமாக பரிசீலிக்கவில்லை என திருத்துனர் தெரிவித்துள்ளார். பரீசிலிக்கும் வாய்ப்பு இருந்திருந்தால் சில்வா அதனைச் செய்திருக்க வேண்டும். சில்வா கொள்வனவு செய்தவுடன் மகிழுந்தை தன்னுடன் எடுத்துச் சென்றிருப்பதால் அதனை பரீசிலிக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளார். சில்வா அதனைச் செய்யாததால் பெரேரா மீறிய மேற்போந்த மூன்று ஒப்பந்த மீறல்களும் செல்லுபடியற்றதாகிறது.

4. ஒரு கொள்வனவாளனாக சில்வா பெற்றுக்கொள்ளக்கூடிய நிவாரணங்கள் வருமாறு:

1. விசேட செயல்நிறைவேற்றம்

விற்பனை ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட படி ஒப்பந்தத்தை முழுவதும் நிறைவேற்றக் கோருதல்

2. விலையினைப் பெற்றுக்கொள்தல்

கொள்வனவாளன் பொருளின் விலையைச் செலுத்தியிருப்பின் அச் செலுத்தப்பட்ட விலையினை மீளப் பெற முடியும்

3. நிபந்தனை மீறப்படிருந்தால் பொருட்களைப் ஏற்றுக்கொள்ள மறுத்தல்

4. உத்தரவாதம் மீறப்பட்டிருந்தால்

i. பொருளின் விலையினைக் குறைக்க முடியும்

ii. இழப்பினைப் பெற்றுக்கொள்ள முடியும்

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

**பிரிவு *D* இன் நிறைவு**

***Notice :***

These answers complied and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.

These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers".

The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2017 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*
*All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*